## 2026.09.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. வைத்தியர் நெவில் பர்னாந்து மருத்துவமனைக்கான முகாமைத்துவ சட்டகத்தை நிறுவுதல்

2017.06.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய வைத்தியர் நெவில் பர்னாந்து மருத்துவமனையின் நிர்வாக நடவடிக்கைகளை சுகாதார விடயதான அமைச்சுக்கு 2017.08.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் குறித்த மருத்துவமனையின் முகாமைத்துவப் பணிகள் இரட்டைரக (hybrid) தொழிற்பாட்டு வடிவமைப்புக்கமைய இலங்கை விமானப் படையின் கீழ் பேணிச் செல்வதற்கும், இம்மருத்துவமனையை கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரச தொழில்முயற்சியாக இயக்குவதற்கும் 2026.02.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் இலங்கை விமானப் படை இணைந்து தற்போது வைத்தியர் நெவில் பர்னாந்து மருத்துவமனைக்கான முகாமைத்துவத்திற்கு நிதி மற்றும் நிர்வாகச் சட்டகமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. உத்தேச முகாமைத்துவ சட்டகத்தின் கீழ் வைத்தியர் நெவில் பர்னாந்து மருத்துவமனையால் பொதுமக்களுக்கான வதிவிட மற்றும் வெளிநோயாளர் சிகிச்சை சேவைகள் இலவசமாகவும், கட்டண அறவீட்டின் அடிப்படையிலும் வழங்கப்படும். அதற்கமைய, உத்தேச முகாமைத்துவ சட்டகம் கீழ்க்காணும் வகையில் அமுல்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்களும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

- மருத்துவமனையின் உரித்து மற்றும் திறைசேரிக்கு 100 சதவீத பங்குரிமையுடன் கம்பனியின் கீழ் பாரப்படுத்தல் மற்றும் மருத்துவமனை முகாமைத்துவம் இலங்கை விமானப்படையால் மேற்கொள்ளல்.
- பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் விதந்துரையின் அடிப்படையில் திறைசேரி செயலாளரால் உத்தேச கம்பனியின் பணிப்பாளர் சபையை 11 பேருடன் நியமித்தல்.
- 2026 – 2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு உத்தேச கம்பனியின் பணிக்குழாமினரின் சம்பளம் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய நிதியை திறைசேரி மூலம் வழங்கல் மற்றும் பின்னர் இம்மருத்துவமனையை சுயாதீன நிதியீட்டல் நிறுவனமாக பேணிச் செல்லல்
- மருத்துவமனையின் மூலம் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் சுகாதார சேவைகளுக்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி மூலம் 125 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுப் பெறுமதியுடன் கூடிய மருந்துகள், மருத்துவ வசதிகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களை வருடாந்தம் மருத்துவமனைக்கு வழங்கல்.

**02. இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மதியுரைகள் தொடர்பான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இந்தோனேசியா மற்றும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர தொடர்புகள் நிறுவப்பட்டு 2027 ஆம் ஆண்டில் 75 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. அதற்கமைய, இருநாடுகளுக்கிடையில் இருதரப்பு தொடர்புகளை மேலும் பலப்படுத்தி, முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் மற்றும் விரிவாக்கம் செய்வதற்காக மதியுரைகள் தொடர்பான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக இருதரப்பினரும் உடன்பாடு தெரிவித்துள்ளனர். குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இருதரப்பு தொடர்புகளை மதிப்பீடு செய்வதற்கும், பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த விடயதானங்கள் தொடர்பாக தத்தமது நிலைப்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்கும், நிரந்தர இருதரப்பு மதியுரைகளை மேற்கொள்வதற்கும் வசதிகள் வழங்கப்படும். அதற்கமைய, 05 ஆண்டு காலப்பகுதிக்கு வலுவாக்கமுள்ள வகையில் மதியுரைகள் தொடர்பான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்தோனேசியாவின் வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கை வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு பதில் கடமை வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. 79 ஆவது சுதந்திரதின விழா ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்தல்**

2027.02.04 அன்று இடம்பெறவிருக்கும் 79 ஆவது சுதந்திரதின விழாவின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையிலும் மற்றும் ஏற்புடைய கௌரவ அமைச்சர்களின் பங்கேற்பில் அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. நகர மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட காலிங்க மாவத்த, கொழும்பு 05 இலுள்ள வீடமைப்புத் தொகுதியில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பாதுகாப்பான, திறன்களைக் கொண்டதும், பலம்வாய்ந்ததுமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்**

காலிங்க மாவத்த, கொழும்பு 05 இல் அமைந்துள்ள 528 வீட்டலகுகளுடன் கூடிய வீடமைப்புத் திட்டத்தில் 384 வீட்டலகுகளில் குறைந்த வசதிகளுடன் கூடிய நகர்ப்புற குடியிருப்புக்களிலிருந்து அகற்றப்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. நிரந்தர வீட்டு உரிமைகள் கிடைக்கப்பெற்றாலும், வழக்கமான வாழ்க்கை வட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களால், அக்குடியிருப்பாளர்கள் பல்வேறு சிக்கலான சமூகப் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், குறித்த குடும்பங்களை வலுப்படுத்துவதற்காக பல்துறைசார் இடையீட்டின் கீழ் கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக Agromart Outreach Foundation இனால் கருத்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் தேவைப் பகுப்பாய்வு, பொருளாதார இயல் மாற்றம், பூரண குடும்ப ஒத்துழைப்பு மற்றும் நிலைபேறான ஒருங்கிணைப்பு ஆகிய 04 அடிப்படைப் பிரிவுகளை உள்ளடக்கியவாறு, 03 ஆண்டுகளில் உரிய குறைந்த வருமானங் கொண்ட நகர்ப்புற பெண்களை வலுவூட்டும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தேவையான கொள்கை ரீதியான

வழிகாட்டல் மற்றும் நிர்வாக அனுசரணை வழங்கப்படுவதுடன், Agromart Outreach Foundation அமைப்பால் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தொழிநுட்ப ரீதியான விசேட நிபுணத்துவ அறிவு மற்றும் நிதியளிக்கப்படும். தேவையான வசதிகளை வழங்கும் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமாக நகர அபிவிருத்தி அதிகாரசபை செயலாற்றும். அதற்கமைய, உத்தேச கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும், அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் Agromart Outreach Foundation இற்கிடையில் கையொப்பமிடுவதற்கும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான முன்னரே அச்சுப் பொறிக்கப்பட்ட 05 மில்லியன் பொலிகாபனேற் அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை**

தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான முன்னரே அச்சுப் பொறிக்கப்பட்ட பொலிகாபனேற் அட்டைகளை ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு கொள்வனவு செய்வதற்கான பெறுகைச் செயன்முறையை அமுல்படுத்துவதற்கு 2025.04.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சர்வதேச போட்டிப் பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடித்து விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 08 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய விலைமனுதாரரான, ஜேர்மன் ஆராடடியரநச ID Services GmbH இற்கு முன்னரே அச்சுப் பொறிக்கப்பட்ட 05 மில்லியன் பொலிகாபனேற் அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை 4.93 மில்லியன் யூரோ தொகைக்கு வழங்குவதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. தித்வா புயல் அனர்த்தத்தின் பின்னர் இலங்கையின் புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்திற்கு இந்திய அரசால் வழங்கப்படும் கடன் வசதிகளைப் பயன்படுத்தல்**

தித்வா புயல் அனர்த்தத்தால் இடம்பெற்ற பாதிப்புக்களுக்கான புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இந்திய அரசால் 'சாகர் பந்து நடவடிக்கை' இன் கீழ் இந்திய ரூபாய் கடன்திட்டங்கள் மூலம் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களில் நீண்டகாலக் கடன் வசதியொன்றும் மற்றும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் குறுங்காலக் கடன் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது. குறித்த குறுங்காலக் கடன் வசதியின் கீழ் கால்நடை வளங்கள் துறையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இந்தியாவின் உயிரின வளர்ப்புக் கால்நடைகளை இறக்குமதி செய்வதற்காக 05 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த குறுங்காலக் கடன் வசதியில் எஞ்சியுள்ள 95 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகையைப் பயன்படுத்தி தித்வா புயல் அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் சேவைகளை வழங்கல் மற்றும் நிவாரண சேவைகளை இலகுபடுத்துவதற்குத் தேவையான நோயாளர் காவு வண்டிகள், மலக்கழிவகற்றல் ஊர்தி, சிங்கல் கப் வண்டி மற்றும் டிப்பர் வண்டி போன்ற அத்தியாவசிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்திய குறுங்காலக் கடன் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு, மற்றும் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் அதன்கீழ் இயங்குகின்ற நிறுவனங்களுக்கு மேற்குறிப்பிட்ட

அத்தியாவசிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு இயந்திரோபகரணங்கள் கொள்வனவு செய்தல்**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் நகர மற்றும் தாழ் நிலப் பிரதேசங்களில் வெள்ள அபாயத்தைக் குறைத்தல், வடிகாலமைப்புக் கட்டமைப்பை வினைத்திறனாக பேணிச் செல்லல், வெள்ளப் பெருக்கின் போது அவசர தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் கால்வாய் வழிகளைப் பராமரித்தல் போன்ற முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த பணிகளை வினைத்திறனாகவும் துரிதமாகவும் மேற்கொள்வதற்காக இக்கூட்டுத்தாபனத்தின் உள்ளக நடவடிக்கை இயலளவுகளை மேலும் பலப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், நகரத்தை அண்டிய பகுதிகளில் ஏற்படுகின்ற வெள்ள நிலைமைகளுக்கு பெரும்பாலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற சிறியளவிலான கால்வாய்களைத் துப்பரவு செய்வதற்குப் பயன்படுத்தக் கூடிய சிறியளவிலான இயந்திரோபகரணங்களை கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. திறைசேரி மூலம் உரிய இயந்திரோபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக உரித்துப் பங்களிப்பாக 625 மில்லியன் ரூபாய்களைக் இக்கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த நிதியையும் மற்றும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதியையும் பயன்படுத்தி 1,233 மில்லியன் ரூபாய்கள் மொத்த மதிப்பீட்டுச் செலவின் கீழ், முறையான பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடித்து இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு உரிய இயந்திரோபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. கிராமிய வீதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீதிப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான ஒப்பந்தங்களை வழங்குதல்**

கிராமிய வீதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மேல் மாகாணம் மற்றும் வடக்கு மாகாணங்களில் கிராமிய வீதி அபிவிருத்தி பக்கேஜ் 05 புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக தேசிய போட்டிப் பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடித்து விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 17 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில், இப்பக்கேஜ் 05 இல் 03 பக்கேஜ்களுக்கான ஒப்பந்தங்கள் கீழ்க்காணும் வகையில் வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுங்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

- மேல்மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தின் கிராமிய வீதிகள் புனரமைப்புச் செய்தல் மற்றும் மேம்பாட்டுக்கான பக்கேஜ் இலக்கம் 02 இற்கான ஒப்பந்தம் கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s RR Construction (Pvt) Ltd இற்கு 659.05 மில்லியன் ரூபாய் தொகைக்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) வழங்குதல்.
- வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் கிராமிய வீதிகள் புனரமைப்புச் செய்தல் மற்றும் மேம்பாட்டுக்கான பக்கேஜ் இலக்கம் 01 இற்கான ஒப்பந்தம் கணிசமான

பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s RR Construction (Pvt) Ltd இற்கு 801.74 மில்லியன் ரூபாய் தொகைக்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) வழங்குதல்

- வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமிய வீதிகள் புனரமைப்புச் செய்தல் மற்றும் மேம்பாட்டுக்கான பக்கேஜ் இலக்கம் 02 இற்கான ஒப்பந்தம் கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s RR Construction (Pvt) Ltd இற்கு 659.12 மில்லியன் ரூபாய் தொகைக்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) வழங்குதல்

**09. முத்துராஜவெல தொடக்கம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் வரைக்கும் விமானங்களுக்கான எரிபொருள் ஏற்றுச் செல்வதற்கான வசதிகளை வழங்குதல்**

முத்துராஜவெல 92,000 கொள்ளளவுடன் கூடிய விமானங்களுக்கான எரிபொருள் தாங்கிகள் தொகுதி மற்றும் அதுசார்ந்த வசதிகளை நிர்மாணித்தல், அக்களஞ்சிய வசதிகளை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் எரிபொருள் நிரப்பு முனையத்திற்கு இணைப்புச் செய்கின்ற விசேட எரிபொருள் கொண்டு செல்கின்ற குழாய் வழியை நிர்மாணித்தல் மற்றும் முத்துராஜவெலவில் தற்போதுள்ள முனையத்தில் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கான கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2024.07.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, சர்வதேச போட்டி விலைமுறிக் கோரல் முறைகைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 03 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைக்கமைய, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய விலைமனுதாரரான M/s, China Petroleum Pipeline Engineering Company Limited இற்கு 40.84 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 8,548.75 மில்லியன் ரூபாய்கள் (வரியுடன்) தொகைக்கு இவ் ஒப்பந்தத்தை வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. இலங்கை கிரிக்கட் சட்டமூலம்**

இலங்கை கிரிக்கட் மீள்கட்டமைப்புக்கான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2026.06.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை கிரிக்கட் ஆளுகை, ஒழுங்குமுறைப்படுத்தல், மேம்படுத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக இலங்கை கிரிக்கட் இனை நிறுவுவதற்காகவும், நல்லாளுகை, அறநேர்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஏற்புடையதன்மை மற்றும் சமமான வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற கோட்பாடுகள் 0மூலம் கிரிக்கட் விளையாட்டின் விருத்திக்காகவும், அனைத்துப் பங்குபற்றுநர்களின் நலனோம்புகையைப் பாதுகாத்தல் மற்றும் ஊழல் மற்றும் ஏனைய முறைகேடான செயற்பாடுகளிலிலிருந்து கிரிக்கட் இனைப் பாதுகாப்பதற்காகவும் இலங்கை கிரிக்கட் கூட்டிணைத்தல், அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்களுக்கு சட்ட ரீதியான ஏற்பாடுகளை வகுத்து சட்ட வரைஞரால் இலங்கை கிரிக்கட் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்திற்கு சட்டமா அதிபர் அவர்களின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. நீர்ப்பாசன பணிப்பாளர் நாயம் பதவிக்கு நியமித்தல்**

நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகமாக தற்போது கடமையிலுள்ள கலாநிதி (பொறியியலாளர்) திரு. கே. வெலிகேபொலகே அவர்கள், கட்டாய ஓய்வு வயதை எட்டியமையால் 2026.10.06 ஆம் திகதி தொடக்கம் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். அதற்கமைய, வெற்றிடமாகவுள்ள நீர்ப்பாசன அமைச்சின் மேலதிக செயலாளர் (நீர் வளங்கள் அபிவிருத்தி) கடமையாற்றிய இலங்கை பொறியியலாளர் சேவையின் விசேடதர அதிகாரியான, (பொறியியலாளர் ) திருமதி. பீ.எம்.ஜயதீர அவர்களை 2026.10.06 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் நியமிப்பதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**